Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MARCH 1, 2024

வெள்ளிக்கிழமை மார்ச் 01, 2024 | ஒளி: 09 கதிர் 203 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

### "அஸ்வெசும திட்டத்தில் மோசடி செய்த

# 7,000 குடும்பங்கள் மீது நடவடிக்கை"



பொய்யான தகவல்களின் மூலம் அஸ்வெசும திட்டத்தின் நன்மைகளைப் பெற்ற சுமார் 7,000 பேர் அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### பாரதூரமான குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டவர் பொலிஸ் மா அதிபர்:

# "ஜனாதிபதியின் செயற்பாடு ஜனநாயகத்திற்கு பாரிய சவால்"



இலங்கையின் 36ஆவது பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோனை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். அதுவரை பதில் பொலிஸ் மா அதிபராக செயற்பட்டமை இந்நியமனம் சட்டவிரோதமானது மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளை அப்பட்டமான மீறல் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் இதுவரை 35 பொலிஸ் மா அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இங்கு பின்பற்றப்பட்ட அனைத்து நடைமுறைகளையும் மீறி மேற்கொள்ளப்பட்ட இந்நியமனம் முற்றிலும் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்துகிறது. இது அரசியலமைப்பை மீறுவதோடு, அரசியலமைப்பு பேரவையின் தீர்மானத்திற்கு எதிரானது என்பதையும் சுட்டிக்காட்டலாம்.

தொடர்ச்சி P2

# ஜப்பானில் வேலை வாய்ப்பு



ஜப்பானில் கட்டிட சுத்திகரிப்பு துறையில் இலங்கை தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளதுடன், இதற்கான பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ளது.

தொடர்ச்சி P2

### மின்சாரக் கட்டணத்தை

# 33 சதவீதமாவது குறைக்க வேண்டும்

## பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு பரிந்துரை



நாட்டில் மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், தற்போதைய மின் கட்டணத்தில் ஆகக் குறைந்தது 33 சதவீதம் குறைக்கப்பட வேண்டுமெனப் பொருளாதார நெருக்கடி பாதிப்பைத் தணிக்கும் துறைசார் கண்காணிப்புக் குழு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

மேற்படி குழு அண்மையில் பாராளுமன்ற கட்டடத்தில் கூடிக் கலந்துரையாடிய பின்னரே, இந்த பரிந்துரையை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


தொடர்ச்சி P2

# முஷாரப் எம்.பியை நீக்கியமை சட்டத்துக்கு முரணானது



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்பை கட்சியில் இருந்து நீக்கியது சட்டத்துக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தான் கட்சியில் இருந்து நீக்கப்பட்டமை தவறானதென தெரிவித்து முஷாரப் எம்.பி தாக்கல் செய்திருந்த மனு நீதியரசர்கள் ஷிரான் குணரத்ன, பிரியந்த ஜயவர்தன, அர்ஜுன ஒபேசேகர முன்னிலையில் நீண்டகாலம் ஆராயப்பட்டது.
அதன் தீர்ப்பே வியாழக்கிழமை (29) வழங்கப்பட்டுள்ளது.



# பேருந்து விபத்தில் 36 பேர் காயம்

மொனராகலையில் வியாழக்கிழமை (29) காலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் 36 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
விபத்தில் பாடசாலை மாணவர்கள் 24 பேர் உட்பட 36 பேர் காயமடைந்துள்ள நிலையில், அவர்கள் சியம்பலாண்டுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று, புத்தம பகுதியில் இருந்து மொனராகலை நோக்கிப் பயணித்தபோதே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.
விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# 100 மில்லியன் ரூபாய் இழப்பீடு கோரும் கெஹலிய



குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தன்னை எவ்வித நியாயமான காரணமும் இன்றி கைது செய்து விளக்கமறியலில் வைத்ததன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்கக் கோரி முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தனது சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி சனத் விஜேவர்தன ஊடாக தாக்கல் செய்யப்பட்ட மனுவில், பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்டோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அடிப்படை மனித உரிமைகளை மீறியமைக்காக பிரதிவாதிகளிடமிருந்து 100 மில்லியன் ரூபாய் இழப்பீட்டைப் பெற்றுத் தருமாறும் மனுதாரர் கோரியுள்ளார்.

# சுமந்திரனின் மனுவை நிராகரித்தது நீதிமன்றம்



நிகழ்நிலை காப்பு சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விதம் சட்டத்திற்கு முரணானது என தீர்ப்பளிக்குமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அடிப்படை உரிமை மனுவை விசாரணையின்றி நிராகரிக்க உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை (29) தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

### "தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவை

# இரத்துச் செய்ய உடன்பாடு"



தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவை கட்சியின் நலன் கருதி இரத்துச் செய்வதற்கு உடன்படுவதாகக் கட்சியின் உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கே.வி.தவராஜா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நீதிமன்றில் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவை இரத்துச் செய்யும்படி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான வழக்கு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவின் முன்னிலையில் வியாழக்கிழமை (29) விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே சட்டத்தரணி கே.வி.தவராஜா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



# பதவியேற்றார் தேசபந்து

## வாழ்த்தினார் ஜனாதிபதி ரணில்

பொலிஸ் தலைமையகத்தில் பொலிஸ் மா அதிபராக தனது கடமைகளை வியாழக்கிழமை (29) பொறுப்பேற்றுக் கொண்ட தேசபந்து தென்னகோன், ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் 36ஆவது பொலிஸ்மா அதிபராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள நிலையிலேயே பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார்.

இதன்போது, புதிய பொலிஸ்மா அதிபருக்கு வாழ்த்துக் கூறிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அவருடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

தொடர்ச்சி P2

# உலகளாவிய ரீதியில் இலங்கை முன்னணி நாடாக அங்கீகரிப்பு

ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் பேரவையின் ஆறாவது அமர்வில் (UNEA-6), சதுப்புநிலங்களை மறுசீரமைப்பதில் உலகளாவிய ரீதியில் இலங்கை முன்னணி நாடாக அங்கீகரிக்கப்பட்டது.

கென்யாவின் நைரோப் நகரில் அமைந்திருக்கும் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் வேலைத் திட்டத்தின் (UNEP) தலைமையகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்தன கலந்துகொண்டார்.

தொடர்ச்சி P2



# நாட்டில் அதிகரிக்கும் எச்.ஐ.வி

நாட்டில் புதிதாக எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 14 சதவீதம் அதிகரித்துள்ளதாகத் தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு திட்டப் பணிப்பாளர் சமூக வைத்திய நிபுணர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கண்டறியப்பட்ட நோயாளிகளில் பெரும்பாலானவர்கள் ஆண்கள் எனவும் ஒருவர் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானால், அதன் அறிகுறிகளை வெளிப்படுத்த சுமார் எட்டு வருடங்கள் ஆகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, எச்.ஐ.வி அறிகுறிகளுக்கு நிகரான அவதானங்கள் தென்பட்டால், எச்.ஐ.வி பரிசோதனை அவசியம் எனவும், அதற்காகப் பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் ஜானகி விதானபத்திரன மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 7,000 குடும்பங்கள் மீது நடவடிக்கை”

மேலும் கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர்,

அஸ்வெசும முதல் கட்ட கணக்கெடுப்பில், 34 இலட்சம் குடும்ப அலகுகளின் தகவல்கள் சரிபார்க்கப்பட்டன. இதன்படி 19 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறத் தகுதி பெற்றுள்ளன. இதுவரை பெறப்பட்ட மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளின் அடிப்படையில், ஜூலை 2024 முதல் தகுதியானவர்களுக்குப் பணம் செலுத்த நலன்புரி நன்மைகள் சபை தயாராகவுள்ளது.

எங்களுக்கு 12,27,000 முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் கிடைத்துள்ளன. அவர்களில் சுமார் 11,97,000 பேர் தொடர்பில் இதுவரை பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகைக்கு மேலதிகமாக, அஸ்வெசும உதவிகள் உண்மையிலேயே தகுதியான ஒரு குழுவினருக்குக் கிடைக்கவில்லை. முதல்கட்ட விண்ணப்பத்தில் அவர்களுக்கு விண்ணப்பப் படிவங்களை வழங்காததால், அவர்களுக்கு அஸ்வெசும பலன் கிடைக்கவில்லை.

> **“இரண்டாம் கட்ட விண்ணப்பம் கோரல் 2024 மார்ச் 15ஆம் திகதியுடன் நிறைவடையும். விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்காத எவரும் அஸ்வெசும பலன்களைப் பெறத் தகுதி பெறமாட்டார்கள்**

அதன்படி, ஒன்லைன் ஊடாக மேற்கொண்ட பரந்த விழிப்புணர்வுக்குப் பிறகு 200,000 - 250,000 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளோம். இவ்வாறாக பிரதேச செயலகங்களுக்கு நேரடியாக வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தற்போது எமது மென்பொருளில் உள்வாங்கப்படுகின்றது. அதன்படி, இரண்டாம் கட்ட விண்ணப்பம் கோரல் 2024 மார்ச் 15ஆம் திகதியுடன் நிறைவடையும். விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்காத எவரும் அஸ்வெசும பலன்களைப் பெறத் தகுதி பெறமாட்டார்கள் என்பதை வலியுறுத்த வேண்டும்.

மேலும், புதிய விண்ணப்பதாரர்களின் தரவு சரிபார்ப்பு மற்றும் சான்றுப்படுத்தல் என்பன நிறைவடைந்த பிறகு, 2024 ஜூன் முதல் 24 இலட்சம் குடும்ப அலகுகளுக்கு அஸ்வெசும பலன்கள் வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, 2024ஆம் ஆண்டுக்கான அஸ்வெசும தொகைக்காக 205 பில்லியன் ரூபாவை செலவிட எதிர்பார்க்கிறோம். அதனுடைய ஒதுக்கீடுகள் தற்போது முடிவடைந்துள்ளது.

இதுவரை கிடைத்த மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளையடுத்து, சுமார் 7,000 பேர் அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தவறான தகவல்களை அளித்து நன்மைகளை அடைந்துள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான நபர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளோம். அவர்களிடமிருந்து பணத்தை மீளப்பெறவும் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தயாராகி வருகிறோம் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# “ஜனாதிபதியின் செயற்பாடு ஜனநாயகத்திற்கு பாரிய சவால்”



தற்போதைய ஜனாதிபதி தனது விருப்பத்திற்கேற்ப தன்னிச்சையாக செயற்படுவது ஜனநாயகத்திற்கு பாரிய சவாலாகும். இது நாட்டின் சட்டத்தின் ஆட்சிக்கு எதிரான பாரிய தாக்குதலாகும் என்பதோடு, குறுகிய அரசியல் இலக்குகளை இலக்காகக் கொண்டு இவ்வாறு செயற்படுவது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

தேசபந்து தென்னகோன் போன்றதொரு அதிகாரி, தனது தொழில் வாழ்க்கையில் பாரிய மற்றும் பாரதூரமான குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்ட ஒருவர், பொலிஸ் திணைக்களத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை சமூக நீதிக்கும் சமூக நலனுக்கும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சட்டத்தை மதிக்கும் சமூகத்தின் அடிப்படையானது வலுவான சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தப்படும், ஜனநாயக ஆட்சி முறையின் ஸ்திரத்தன்மை என்பதோடு, இவ்வாறான சட்டவிரோத நியமனங்கள் மூலம் அதன் புனிதத்தன்மைக்குச் சவால் விடுவது ஒரு தேசம் எனும் வகையில் வருந்தத்தக்க விடயமாகும்.

தேசபந்து தென்னகோன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு குற்றம் சாட்டப்பட்டு, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பல்வேறு வழக்குகளில் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்ட ஒருவராவார். அக்குற்றச்சாட்டுகளில், கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து, போராட்டக்காரர்களால் கண்டெடுக்கப்பட்ட பணத்தை மீள வழங்காமை தொடர்பிலும் விசாரிக்கப்பட்டு வரும் வழக்கும் ஒன்றாகும். (வழக்கு இலக்கம் B22516/22)

இது தவிர உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது, சட்டத்தை உரிய வகையில் அமுல்படுத்தாத உத்தியோகத்தர் எனும் மிகப் பாரிய குற்றச்சாட்டுக்கு உள்ளானமை, முன்னாள் பொலிஸ் அதிகாரியான ஷானி அபேசேகரவிற்கு எதிராக அநீதியான முறையில் செயற்பட்டமை தொடர்பான பல்வேறு வழக்குகளில் பிரதிவாதியாக உள்ளவர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

இவை தவிர, சட்டவிரோதமான கைது மற்றும் கொடுமைப்படுத்தல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில், கடந்த 2023 டிசம்பர் 14ஆம் திகதி, தேசபந்து தென்னகோனுக்கு எதிராக உயர் நீதிமன்றம் உத்தரவொன்று பிறப்பித்துள்ளது. கடந்த மே மாதம் கோட்ட கோ கம மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணையிலும் தேசபந்து தென்னகோன் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டுள்ளார். இளம் ஊடகவியலாளரான தரிந்து ஜயவர்தனவை அச்சுறுத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இது தவிர, கைது செய்யப்பட்டவர்களைச் சித்திரவதை செய்தமை, பல்வேறு சட்டவிரோத அழுத்தங்களைப் பிரயோகித்தமை தொடர்பிலும் தேசபந்து தென்னகோன் மீது பல்வேறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு மேலதிகமாக, தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றிய காலத்தில், நாட்டில் பாரிய குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன.

அவற்றில், ஊடகவியலாளர்கள் மீது, தாக்குதல், அச்சுறுத்தல்கள், கடத்தல்கள், நாடு முழுவதும் பல்வேறு பாரிய படுகொலைகள் இடம்பெற்றமை, பாதாள உலக கோஷ்டியினர் முன்னெப்போதும் இல்லாத வகையில் செயற்படுவதையும் தெளிவாக அடையாளம் காண முடிகின்றது.

இலங்கையில் பொலிஸ் மா அதிபர்களின் நியமன வரலாற்றை உற்று நோக்கினால், சமூகத்தின் பல்வேறு தரப்பினரின் கடும் எதிர்ப்பை சம்பாதித்த ஒரே பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோனை குறிப்பிட முடியும்.

அவர் பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டதோடு, அவரை அவ்வாறு நியமித்ததை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அந்த நியமனத்தை ஏற்றுக்கொள்கின்றமை அரசியலமைப்புக்கு முரணானது என, மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அத்துடன், மே 09 ஆம் திகதி கோட்டா கோ கமவில் முன்னெடுக்கப்பட்ட தாக்குதல் தொடர்பில் அவரைக் கைது செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறு சட்டத்தின் பார்வையிலும் முழு சமுதாயத்திலும் பாரிய குற்றச்சாட்டிற்கு உள்ளான ஒருவரை பொலிஸ் மா அதிபர் பதவிக்கு ஜனாதிபதி நியமித்துள்ளமையானது, அரசியலமைப்பு சபையைப் புறக்கணிக்கும் செயலாகும் என்பதைச் சுட்டிக்காட்டலாம். அத்துடன், இது பொலிஸ் திணைக்களத்தின் நற்பெயருக்கும் ஒரு களங்கம் என குறிப்பிட்டுள்ளார்.

# ஜப்பானில் வேலை வாய்ப்பு

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் ஜப்பான் கட்டிடத் துப்புரவுப் பணியாளர்கள் சங்கத்தினருக்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இது குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஜப்பானிய மொழி புலமை மட்டம் N4 விண்ணப்பதாரிகள் SSW விசா பிரிவில் விண்ணப்பிக்க முடியும். இதற்கென தகுதிகாண் பரீட்சை எழுத்து மற்றும் செயன்முறையில் நடத்தப்படும்.

SWW மட்டம் 27 முகாமைத்துவ பதவிகளுக்கு விண்ணப்பிப்பதுடன் அது நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பையும் வழங்கும் என இக்கலந்துரையாடலில் பேசிய ஜப்பானியப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப் பரீட்சைக்கு ஏற்றவாறு பாடப்புத்தகங்கள் மற்றும் காணொளிகள் பரீட்சாதிகளுக்கு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் ஜப்பானியக் கட்டிடத் துப்புரவுப் பணியாளர்கள் சங்கத்தின் சிறப்புப் பிரதிநிதியாக சச்சியோ சுகியாமா கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 33 வீதமாவது குறைக்க வேண்டும்

அதேவேளை, மின் கட்டண அதிகரிப்பு காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 10 இலட்சத்துக்கும் அதிகமான மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பில் அக்குழுவில் ஆராயப்பட்டுள்ளது.

அந்த வகையில், மின் கட்டண நிலுவைத் தொகையைத் தவணை முறையில் நுகர்வோரிடமிருந்து அறவிடுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படவேண்டும் என்பது தொடர்பிலும் அந்தக் குழு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதவியேற்றார் தேசபந்து

இதனையடுத்து, புதிய பொலிஸ்மா அதிபர் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னமொன்றையும் வழங்கியுள்ளார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன ஓய்வுபெற்ற பின்னர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த தேசபந்து தென்னகோன், 3 மாத காலத்துக்குப் பதில் பொலிஸ் மா அதிபராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்டார். இதன்படி, அவர் இதுவரை குறித்த பதவியை வகித்து வந்தார்.

கொழும்பு நாலந்தா கல்லூரியின் பழைய மாணவரான தேசபந்து தென்னகோன் 1998ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி இலங்கை பொலிஸில் உதவி பொலிஸ் அத்தியட்சகராக இணைந்தமை குறிப்பிடத்தக்கது.

# “இரத்துச் செய்ய உடன்பாடு”

அத்துடன் ஜனவரி 27ஆம் திகதி இடம்பெற்ற கூட்டம் ஆகியவற்றை இரத்துச் செய்யக் கோரிய வழக்கு விசாரணைக்காக இன்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, குறித்த கோரிக்கைக்கு நாம் உடன்பட்டோம். அதற்கான காரணத்தையும் நாம் நீதிமன்றில் முன்வைத்தோம்.

அதாவது, குறித்த வழக்கானது ஒரு சமூகத்திற்கு எதிராக, கட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்காகும். இதனை நீண்ட காலத்திற்கு கொண்டு செல்வோமேயானால் அது சமூகத்திற்கு செய்கின்றது ரோகமாகவும், கட்சின் பாதிப்புக்கு நாங்களும் ஒருகாரணமாக இருந்ததாகவும் அமைந்துவிடும். எனவே, கட்சியினதும் மக்களினதும் நலனினை கருத்திற்கொண்டு, குறித்த வழக்கினை விரைவாக முடிவுறுத்துவதற்கு இவ்வழக்கில் எதிராளியாக குறிப்பிட்டு வருகைதந்த அனைவருடைய சம்மதத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்த தரப்பினரின் வேண்டுகோளுக்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அதனை ஏற்றுக்கொண்டோம். எமது தரப்பில் இரண்டு விடயங்களை முன்வைத்திருந்தோம். அதாவது, வழக்குத் தாக்கல் செய்த தரப்பினர் எந்தவொரு நிபந்தனைகளும் இன்றி,வழக்கை மீளப் பெறவேண்டும். இல்லாவிட்டால் அவர்களின் வேண்டுகோளை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டு வழக்கை முடிவுறுத்துவது என்பதாகும்.

அந்தவகையில், அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டோம். எமது நோக்கம் வழக்கை விரைவாக முடிவுறுத்துவதேயாகும். அதைத்தவிரயார்வெல்வது, யார் தோற்பது என்பது அல்ல. எனினும், துரதிர்ஷ்டவசமாக இன்றையதினம் ஆறாவது எதிரியாக குறிப்பிடப்பட்டிருக்கின்ற எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. எனவே, அவருடைய நிலைப்பாட்டை அறிவதற்காக வழக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



குறித்த வழக்கு தொடர்பாக பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட கட்டாணை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு யாப்பு விதிகளுக்கு முரணானது எனவும் இடம்பெறவுள்ள மாநாட்டுக்கு தடை விதிக்கக்கோரியும் திருகோணமலை சாம்பல்தீவு-கோணேசபுரியைச் சேர்ந்த சந்திரசேகரம்பரா என்பவரினால் மாவை சேனாதிராஜா, எஸ்.ஸ்ரீதரன், எம்.ஏ.சுமந்திரன், சண்முகம்குகதாசன் உட்பட தமிழரசுக் கட்சியின் ஏழு முக்கியஸ்தர்களை எதிர் மனுதாரர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது கடந்த 15ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

# நாட்டில் அதிகரிக்கும் எச்.ஐ.வி



மேலும் இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

“அனைத்து மாவட்டங்களிலும் அதிக ஆபத்துள்ள தொற்றாளர்களுக்கு 2025ஆம் ஆண்டு முதல் சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக, சர்வதேச நிதியத்தின் கீழ் ஆதரவைப் பெறுவதற்கான செயற்றிட்டம் ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதிக ஆபத்து உள்ளவர்களுக்கு எச்.ஐ.வி பரிசோதனை அறிவுறுத்துகிறோம். சிலர் இதற்காக தயக்கம் காட்டுகின்றனர். அவர்கள் தாங்களாகவே பரிசோதனை செய்து கொள்ளவேண்டிய சோதனைக் கருவிகளை ஓர்டர் செய்து இலவச கூரியர் சேவை மூலம் பெறலாம். இதற்கு Know4Sure செயலியைப் பயன்படுத்தி ஓர்டர் செய்யுங்கள், பின்னர் உங்கள் வீட்டிற்கே இலவசமாக டெலிவரி செய்யப்படும் என தெரிவித்துள்ளார்.

# சுமந்திரனின் மனுவை நிராகரித்தது நீதிமன்றம்



பிரியந்த ஜயவர்தன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயத்தால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் அதில் உள்ளடக்கப்படாமை காரணத்தினால் குறித்த சட்டமூலம், சட்டப்பூர்வமாக நிறைவேற்றப்படவில்லை என தீர்ப்பளிக்குமாறு கோரி எம்.ஏ.சுமந்திரன் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலகளாவிய ரீதியில் இலங்கை முன்னணி...

இதன்போது இலங்கைக்கான விருதைச் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க பெற்றுக் கொண்டார்.

காலநிலை மாற்றம், உயிரியல் பல்வகைத்தன்மை இழப்பு மற்றும் சுற்றாடல் மாசு ஆகிய மூன்று நெருக்கடிகளுக்கும் தீர்வு காண்பதற்கான உலகளாவிய ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் அமைப்பின் ஆறாவது அமர்வு நடைபெற்றது.

அமர்வை உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிக்கும் முகமாக நிரந்தரப் பிரதிநிதிகளின் திறந்த குழுக் கூட்டம் நடைபெற்றிருந்த நிலையில், இதன்போது சதுப்புநில மறுசீரமைப்பு முயற்சிகளில் இலங்கையை உலகளாவிய முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள முடியும் என சுட்டிக்காட்டப்பட்டது.

எதிர்கால சந்ததிக்காக நிலையான அபிவிருத்தி இலக்குகளை முன்னோக்கி கொண்டுசெல்வது தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் மாநாட்டின் ஆறாவது அமர்வு, உலகளாவிய சுற்றுச்சூழல் தொடர்பில் முடிவெடுப்பதில் முன்னணியில் உள்ளதோடு மனிதக் குலத்திற்கும் இயற்கைக்கும் இடையே ஒரு புதிய உறவை உருவாக்குவதற்கும் பங்களிக்கிறது.

சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்காக அர்ப்பணிக்கும் ஒரே உலகளாவிய உறுப்பினர் மன்றமாக, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் பேரவையானது, சுற்றுச்சூழல் தொடர்பிலான கூட்டுப் பொறுப்பை நோக்கமாகக் கொண்ட முக்கியமான முன்முயற்சிகள் மற்றும் புத்தாக்க செயற்பாடுகளுக்கான தனித்துவமான களமாகவும் விளங்குகிறது. அரச



நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள், ஆய்வாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பங்குபற்றுதலுடன் நடைபெறும் இந்த மாநாடு சுற்றாடல் கொள்கை வகுப்பிற்கும் களம் அமைத்துக் கொடுக்கிறது.

# சட்டபூர்வ ஹோமியோபதி மருத்துவ சபை இன்மை நாட்டுக்கு ஆபத்து

நாட்டில் ஹோமியோபதி மருத்துவர்களுக்கான சட்டப்பூர்வமான சபையொன்று இன்மை தொடர்பில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என ஹோமியோபதி வைத்தியர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

2006ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஹோமியோபதி மருத்துவ சபை, அக்கால கட்டத்தில் அமைச்சராக இருந்த திஸ்ஸ கரலியத்தவினால் எவ்விதமான காரணங்களும் வழங்கப்படாமல் கலைக்கப்பட்டு, இடைக்கால குழுவொன்றை நியமித்தார். இந்த விடயம் தொடர்பாகச் சபையின் அங்கத்தவர்களால் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, நீண்ட காலமாக விவாதிக்கப்பட்ட வண்ணமிருந்தது. இதனைத் தொடர்ந்து, அமைச்சராக நியமிக்கப்பட்ட சாலிந்த திசாநாயக்க இந்த இடைக்கால நிர்வாக சபையைத் தொடர்ந்தும் நியமித்தார். அந்தச் சபை எவ்விதமான முன் அனுபவமும் இல்லாத அங்கத்தவர்களைக் கொண்டிருந்ததுடன், மோசடியான முறையில் ஹோமியோபதி மருத்துவ அனுமதிகளும் வழங்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் இதுவரையில் எவ்விதமான விசாரணைகளும் முன்னெடுக்கப்படாததுடன், தொடர்ந்தும் இந்த சபையில் நிர்வாகிகள் தெரிவு முறைமையில் முறைகேடுகளும், தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் முறையான தகைமைகளைக் கொண்டிராதவர்களாகவும் அமைந்திருக்கின்றமை இந்த மருத்துவப் பிரிவுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் தற்போது காணப்படும் சட்ட விரோதமான சபையில் சட்ட விரோதமாகப் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டு, ஹோமியோபதி சபைக்கு நிர்வாகிகள் தெரிவுக்காக அமைச்சு அழைப்புவிடுத்துள்ள நிலையில், இந்த தீர்மானத்தில் மாற்றத்தை மேற்கொண்டு, 2009 ஆம் அண்டு கலைக்கப்படுவதற்கு முன்னர் காணப்பட்ட சட்டப்பூர்வமான சங்கத்திலிருந்து அங்கத்தவர்களைக்கொண்டு இந்த தேர்தல் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அந்த வைத்தியர்கள் கோரியுள்ளனர்.

ஹோமியோபதி பட்டம் பெற்றவர்களாக இருந்தாலும், இலங்கையில் இந்தப் பிரிவில் சிகிச்சைகளை வழங்குவதற்கு, சட்டப்பூர்வமாக நிறுவப்பட்ட ஹோமியோபதி சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி செயற்பாட்டாளர்களாக இருக்க வேண்டியது முக்கியமானதாகும்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர் சிசிர ஜயகொடியுடன் உரையாடுவதற்கு வைத்தியர்கள் சிலர் அவரின் அலுவலகத்துக்கு சென்றிருந்த சந்தர்ப்பத்தில், அமைச்சர் அவர்களுக்கு உரிய பதிலளிக்காமல் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றிருந்தமை தொடர்பான காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தன.

கடந்த காலங்களில் பதிவாகியிருந்த சர்ச்சைக்குரிய தரம் குறைந்த மருந்துப் பொருட்கள் இறக்குமதி, சிகிச்சை பெற்றவர்கள் உயிரிழந்தமை மற்றும் பார்வை இழந்தமை போன்ற சம்பவங்களால், ஆங்கில மருந்துப் பொருட்கள் மீது மக்கள் நம்பிக்கை குறைவடைந்து வரும் நிலையில், மாற்று மருந்துப் பொருட்களின் மீது மக்களின் நாட்டம் அதிகரித்துள்ள நிலையில், இந்தப் பிரிவுகளில் இவ்வாறான அனுபவமில்லாத வைத்தியர்கள் சட்டவிரோதமான முறையில் நியமனம் பெற்று இயங்குகின்றமை, இந்தத் துறையின் மீதும் மக்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்திவிடும் என்ற அச்சமும் நிலவுகின்றது.

எனவே இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் இதர பொறுப்பதிகாரிகள் கவனம் செலுத்தி, சட்டப்பூர்வமான ஹோமியோபதி மருத்துவ சபை ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஹோமியோபதி வைத்தியர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# "அடையாள அட்டை விடயத்தில் தோட்ட நிர்வாகத்தின் தலையீடு தேவையில்லை"



மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்பவர்கள் தேசிய அடையாள அட்டையை பெறுவதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கும்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இது தொடர்பில் ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் பிரதீப் சபுதந்திரிக்கு அவசர கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்பவர்கள் தேசிய அடையாள அட்டையை பெறுவதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கும்போது, தோட்ட முகாமைத்துவத்தின் கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

இந்த ஆவணத்தை தோட்ட நிர்வாகத்திடம் பெறுவதற்கு பெருந்தோட்ட மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவது தொடர்பில் இ.தொ.காவின் இளைஞர் அணித் தலைவர் எஸ்.ரூபதர்ஷனிடம் இளைஞர்கள் பலர் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில், இளைஞர் அணித் தலைவர் அமைச்சரின் கவனத்துக்குக்கொண்டு வந்துள்ளார்.

இதனையடுத்து, ஏனைய சமூகங்களுக்குபோல், வதிவிடத்தை உறுதிசெய்யும் நடவடிக்கையும் கிராம சேவகர்கள் ஊடாக முன்னெடுக்குமாறு கோரி, இது விடயத்தில் தோட்ட நிர்வாக தரப்பிடம் இருந்து ஆவணங்கள் எதுவும் பெறப்படாத வகையில் பொறிமுறையை உருவாக்குமாறு கோரி ஆட்பதிவு திணைக்கள ஆணையாளருக்கு அமைச்சரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இம்தியாஸ் பாக்கீரின் நூல் வெளியீடு

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எழுதியுள்ள "மகே கதாவ" (எனது கதை) என்ற வாழ்க்கைச் சரிதை நூல் எதிர்வரும் 5ஆம் திகதி மாலை கொழும்பு 10, ஆனந்தா கல்லூரி, குலரத்ன கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

சிங்களத்தில் வெளியிடப்படும் இந்நூல் மிக விரைவில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலும் வெளியிடப்படவுள்ளது.

வாழக்கையோட்டத்தில் தாம் பெற்றுக்கொண்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் முகமாக 19அத்தியாயங்களில் தமது சிறு பராயாம், பாடசாலை, கல்வி, பல்கலைக்கழக கல்வி, சட்டக் கல்லூரி, மாணவ கால போராட்டத்தோடு 5 தசாப்தகால கொள்கை அரசியல் பயணப்பாதை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை அடங்கலான இந்தச் சுயசரிதை நூல் தாம் கற்ற ஆனந்தா கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்படுவது சிறப்பம்சமாகும்.



# சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்த தேரர் கைது



இரண்டு சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் தேரர் ஒருவர் ஹோமாகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இந்த இரு சிறுவர்களில் ஒருவர் சுகயீனமடைந்துள்ள நிலையில், அவர்களது பெற்றோர் அந்த சிறுவனை வைத்தியத்திற்காக குறித்த தேரரிடம் அழைத்துச் சென்றுள்ளனர்.

சுகயீனமடைந்துள்ள சிறுவனைக் குணப்படுத்த விசேட பூஜைகள் நடத்த வேண்டும் என கூறிய தேரர் சிறுவனை தன்னுடன் தங்க வைத்துக் கொண்டுள்ள நிலையில் இரட்டை சிறுவர்களில் மற்றைய சிறுவனும் சுகயீனமடைந்துள்ளதால் குறித்த தேரர் சிறுவனின் வீட்டுக்குச் சென்று அந்த சிறுவனையும் தன்னுடன் காரில் அழைத்து சென்று இருவரையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் .

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிக்கமைய பொலிஸாரால் சந்தேகநபரைக் கைது செய்து ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் 5 இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இருவரும் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மயக்க மருந்தை கொடுத்து கொள்ளையடித்த பெண்

■ ஆ.ரமேஸ்

புது வருடத்தை கொண்டாடுவதற்காக நுவரெலியாவுக்கு அழைத்து வந்த நபரிடமிருந்து தங்க நகைகள், மற்றும் விலைவுயர்ந்த தொலைபேசி இரண்டை திருடிய பெண் ஒருவர் நுவரெலியா பொலிஸாரால் திங்கட்கிழமை (26) கைது செய்யப்பட்டுள்ளார் .

குறித்த பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸாரால் அப்பெண்ணிடமிருந்து 32 இலட்சத்திற்கு அதிக பெறுமதியான தங்க நகைகள் , ஸ்மார்ட் தொலைபேசி ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணும் கைப்பற்றப்பட்ட பொருட்களும் நுவரெலியா, நீதிமன்றத்தில் புதன்கிழமை (28) ஆஜர்படுத்திய போது மார்ச் மாதம் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க திமன்ற நீதிபதி பிரபுதிகா லங்கான்தினி உத்தரவிட்டுள்ளார் .

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மாலெபே பிரதேசத்தை சேர்ந்த 45 வயது மதிக்கத்தக்க பெண் கொழும்பை சேர்ந்த செல்வந்த நபருடன் நட்பை வளர்த்து அவரை 2024 புது வருடத்தை கொண்டாடுவதற்காக நுவரெலியாவிற்கு (31.12.2023 ) அழைத்து வந்துள்ளார்.

இவ்வாறு வந்தவர்கள் விடுதி ஒன்றில் தங்கி புது வருட வரவை சந்தோஷமாக அனுபவித்துள்ளனர். இதன் போது குறித்த பெண் அழைத்து வந்த நபருக்கு உணவு மற்றும் மதுபானத்தில் மயக்க மருந்தை கலந்து கொடுத்துள்ளார்.

பின்னர் அவரிடமிருந்து 32 லட்சத்திற்கு அதிக பெறுமதியான தங்க நகைகள் மற்றும் விலை உயர்ந்த ஸ்மார்ட் போன்கள் இரண்டை திருடிக்கொண்டு இப் பெண் தலை மறைவாகியுள்ளார்.

மறுநாள் மயக்கத்திலிருந்து தெளிந்தவர் பெண்ணையும், அத்துடன் தனது பொருட்களையும் தேடி காணாததால் இது தொடர்பில் நுவரெலியா பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டுக்கமைய பெண்ணின் தொலை பேசி இலக்கத்தை ஆதாரமாக கொண்டு, நுவரெலியா பொலிஸார் மாலபே பகுதிக்கு சென்று இப் பெண்ணை கைது செய்துள்ளனர்.

# மைத்திரிக்கு வீடு வழங்கும் அமைச்சரவையின் தீர்மானம் இரத்து



மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது அவர் வசித்த கொழும்பு- மஹகமசேகர மாவத்தையில் உள்ள வீட்டை அவர் ஓய்வு பெற்ற பின்னரும் அவருக்கே வழங்குவதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானம் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதன்படி, 2019 அக்டோபர் 15 ஆம் திகதி உரிய வீட்டை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செல்லாது என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாற்று கொள்கைகளுக்கான நிலைய பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் காமினி அமரசேகர மற்றும் குமுதுனி விக்கிரமசிங்க ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் உயர் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த ஜயவர்தன இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

# ஓவியம் வரையும் நிகழ்வு

■ எம். எஸ். எம் .நூர்தீன்



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்கள் மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையின் காட்சிகளை ஓவியமாக வரையும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலக கோட்டை வளாகத்தில் புதன்கிழமை (28) இடம்பெற்றது.

கற்புலக் கலைத்துறை விரிவுரையாளரான ஏ.எல்.அஸ்மர் ஆதமின் வழிகாட்டுதலின் கீழ், கற்புலக் கலைத் தொழில் நுட்பத்துறையில் 2ஆம் வருடத்தில் கல்வி கற்கும் சுமார் 70 மாணவ மாணவிகள் தமது 2ஆம் கல்வித் தவணைக்கான வெளிக்கள ஓவியச் செயற்பாடுகள் என்ற பாடத்திட்டத்திற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் தமது ஓவியங்களை வரைந்து வருகின்றார்கள்.

இம்மாணவர்கள் இக்கோட்டையில் காணக்கிடைக்கும் புராதனக் கட்டடக் கலை அம்சங்களை இயற்கைச் சூழலுடன் இணைந்ததாக ஓவியத்தின் மூலமாக வெளிப்படுத்துவதற்கான பயிற்சியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்ட உதவி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு

■ எப்.முபாரக்

மூதூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு சட்ட உதவி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு பிரதேச செயலாளர் எம். பீ.எம். முபாறக் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, சட்ட உதவி ஆணைக்குழுவின் செயற்பாடுகள், நீதிமன்ற முறைகள் மற்றும் நுகர்வோர் சட்டங்கள் தொடர்பாகச் சட்டத்தரணிகளினால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது

இந்நிகழ்வில், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், சட்டத்தரணிகள், நிருவாக உத்தியோகத்தர், நிருவாக கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் பங்குபற்றியுள்ளனர்.



# மனைவி கொலை வழக்கில் 10 மாதங்களின் பின்னர் கணவன் கைது



தனது மனைவியைப் பலமாகத் தாக்கி காயப்படுத்தி, விபத்தில் காயமடைந்ததாகக் கூறி வைத்தியசாலையில் அனுமதித்ததாகக் கூறப்படும் 32 வயதுடைய கணவர் களுத்துறை குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

30 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான தனது மனைவி முச்சக்கரவண்டியில் இருந்து வீழ்ந்து காயமடைந்துள்ளதாகக் கூறி, இவர் பதுரலிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். காயமடைந்தவர் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கடந்த 2023ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவரது மரணம் தொடர்பில் சந்தேகம் உள்ளதாக உயிரிழந்தவரது குடும்பத்தினர் அளித்த முறைப்பாடுக்கமைய விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், 10 மாதங்களுக்குப் பின்னர் சந்தேகநபரான பெண்ணின் கணவனைக் கைது செய்துள்ளனர்.

# மக்களை பாதுகாக்க வேண்டியவர்களுக்கே பாதுகாப்பில்லை

பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு காவல்துறையைச் சேர்ந்தவர்களிடம் உள்ளது. குறிப்பாக பொலிஸ், மக்கள் பாதுகாப்பு அமைச்சர் போன்றவர்கள் இதற்கு பொறுப்பாளிகளாக உள்ளனர்.

இவ்வாறு மக்களைப் பாதுகாப்பதற்காக நாட்டில் போதைப் பொருள் பாவனை அடங்கலாக சட்டவிரோத செயற்பாடுகளை முழுமையாக இல்லாமல் செய்யும் யுக்திய நடவடிக்கையை மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்து வரும் நிலையில், இதற்கு பல தரப்பினரும் பல்வேறான கருத்துகளை முன்வைத்த வண்ணமுள்ளனர்.

ஒரு சிலர் இந்த நடவடிக்கையை வரவேற்பதுடன், சிலர் இதற்கு எதிர்ப்பையும் வெளியிடுகின்றனர். சரி, இவ்வாறான சட்ட விரோத செயற்பாட்டுடன் தொடர்புடைய சிலர் கைது செய்யப்பட்டு ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்த நிலையில், அவர்களுக்கு நஞ்சு கலந்த பால் வெளிநபரால் வழங்கப்பட்டு அவர்களைக் கொலை செய்ய முயற்சித்த நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டிருந்த குற்றத்தடுப்பு பிரிவின் விசாரணை அதிகாரி ஒருவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ள சம்பவம் பற்றி பேசப்படுகின்றது.

குறித்த குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரி வெளிநாடு சென்ற பின்னர் தமக்கு நேர்ந்த சம்பவம் தொடர்பில் தனியார் ஊடகமொன்றுக்கு விளக்கமளித்துள்ளதுடன், அதன் பின்னர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அது பற்றித் தெளிவுபடுத்தும் வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

இந்த குரல் பதிவுகளைக் கேட்கும்போது, உயரதிகாரிகளுடன் ஏதேனும் வகையில் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கும் நபரால் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றதா என்பது தொடர்பில் சந்தேகம் எழுகின்றது.

குறிப்பாக, இந்த போதைப்பொருள் ஒழிப்பு, குற்றச் செயல்களை இல்லாமல் செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்தவர்கள் மக்கள் பாதுகாப்பு அமைச்சரும், பதில் பொலிஸ் மா அதிபருமாவர். இவர்கள் இந்த செயற்பாடுகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டியது கண்டிப்பானதாகும்.

கடந்த 14 ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறி, பின்னர் சுமார் 2 வாரங்களின் பின்னர் ஊடகங்களுக்கு தமக்கு நேர்ந்த அச்சுறுத்தல் தொடர்பில் ஆதாரங்களுடன் தகவல் வெளியிடும் நிலைக்குக் குற்றத்தடுப்பு பிரிவில் பணியாற்றும் இதர அதிகாரிகளும் அச்சமின்றி முன்வந்து இந்த நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுவார்களா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. குறிப்பாக, தம்மை விட, தமது குடும்பத்தாருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என அறிந்ததும், அதற்கு தமது மேலதிகாரிகளிடமிருந்து உரிய பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாத நிலையில், அவர்களும் பின்வாங்கக்கூடும். துரதிர்ஷ்டவசமான சம்பவம் நடந்தேறிய பின்னர், அவர்களின் இல்லங்களுக்கு சென்று, துக்கம் விசாரிப்பதால் பலனில்லை.

அனைத்து தரப்பினரின் பாதுகாப்பையும் உறுதி செய்து இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சரும், பொலிஸ் மா அதிபரும் கவனம் செலுத்த வேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

அறியாமை என்பது மிகவும் பாரதூரமானது. அறியாமையில் புகுந்து கொள்ளும்போது, வாழ்க்கையின் அழகும், வதனமும் மறைந்து போகின்றன. நல்லதும் சிறப்பானதுமான சிந்தனைகளைச் சிரசில் ஏற்றாமல், தன்னறிவும், கிரகித்தல் அறிவும் இன்றி வாழ்ந்தால், புறக்கணிக்கக் கூடாத நற்பயன்கள், பெறுபேறுகளை இழந்துபோவதை அறியாமல் வாழவேண்டி வரும். இது ஒரு துர்ப்பாக்கிய நிலை.

எந்த ஒரு விடயத்தையும் அங்கீகரிக்க முன்னர், அதைப் பகுத்தறிந்து, சிந்தனைக்குள் புகுத்திக் கொள்ளவேண்டும்.

சின்னக் குழந்தைகள் கூட கேள்விகளைக் கேட்டு, எங்களைத் திக்குமுக்காடச் செய்கிறார்கள். அங்களது சந்தேகங்களுக்கு முழுமையாக விடை அறிய முடியா விட்டாலும் அதை அப்படியே விட்டுவிடுவதும் இல்லை. சில சமயங்களில், அவர்களின் கேள்விகளால் நாங்களும் ஆச்சரியப்படுகின்றோம்.

தெரியாத விடயங்களுக்குள் அமிழ்ந்து போதலாகாது. தெரியாத விடங்களில் முடிவு எடுப்பதும் முட்டாள் தனம். சிறந்த முறையில் பாதை அமைந்தால், ஆன்மாவும் களிப்படையும்.

ஆன்மாவும் கருமங்களும் ஒன்றுக்கொன்று இயைபுபட வேண்டும். சரியான விடயங்களால் தேகம் களிப்படைகின்றது. இதனால், விழிப்புநிலை தானாக மலரும். விருப்பத்துடன் செய்க, அதைச் சரியாகச் செய்க.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

### கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் – 42:

# தரப்படுத்தல்: முரண்பாட்டின் புதுவெளி



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1971ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதிகளில் அறிமுகப்படுத்திய தரப்படுத்தல் முறையானது தமிழர்கள் அரசாங்கத்தால் திட்டமிட்ட முறையில் ஒதுக்கப்பட்ட ஒரு நிகழ்வாகும். சுதந்திர இலங்கையில் மலையகத் தமிழரின் குடியுரிமைப் பறிப்பு, தனிச்சிங்களச் சட்டம் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக சிறுபான்மையினரை சட்ட நிர்வாக ரீதியாக கட்டமைப்பு ஒதுக்கலை நிகழ்த்திய மூன்றாவது நிகழ்வு தரப்படுத்தலாகும். இலங்கையின் இனமுரண்பாட்டின் தோற்றுவாய்கள் பற்றிப் பேசுவோர் 1,956 தனிச்சிங்களச் சட்டம் மற்றும் 1,983 இனவன் முறைகள் பற்றியே அதிகம் கவனம் செலுத்துகின்றனர்.

பலரும் ஆழமாக விளங்கத் தவறுகின்ற முக்கிய நிகழ்வு தரப்படுத்தல். சுதந்திரத்துக்கு முன்னரே, 1945இல் இலவசக் கட்டாயக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இது அக்காலப்பகுதியில் அதிகரிக்கத் தொகை மக்கள் தொகையுடன் இணைந்து பாடசாலைகள் பல புதிதாகத் தோற்றம் பெறவும் பலர் பாடசாலைகளில் இணையவும் வழிவகுத்தது.

1945இல் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் கல்வி கற்றோரின் எண்ணிக்கை 867,000 ஆகவிருந்தது. இது 1960இல் 2,244,000 ஆகவும், 1970இல் 2,700,000 ஆகவும் உயர்ந்தது. இடைநிலைக் கல்வியை வெற்றிகரமாக முடித்த மாணவர்கள், பல்கலைக்கழகத்தில் சேர விரும்பினர்.

இவ்வாறு விரும்பி பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்தவர்களில் 38.9 வீதமானவர்கள் 1945இல் பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்தார்கள். அடுத்த 25 ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தில் நுழைவோரின்

எண்ணிக்கை அதிகரித்த போதிலும், 1973-74 இல் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றோர் 9.7 சதவீதமே. 1945இல் பல்கலைக்கழகத்தில் நுழைந்தவர்களின் எண்ணிக்கை 1,065 ஆக இருந்தது,ஆனால் அது 1950 இல் கிட்டத்தட்ட இரட்டிப்பாகி 1960இல் 3,181ஐ எட்டியது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு,இது 10,423 ஆக மூன்று மடங்கு அதிகமாகும்.

இலவசக் கல்வியானது, அதிகப்படியானோருக்கு ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்கான வாய்ப்புகளைச் சாத்தியமாக்கியது. இது இலங்கையின் கல்வியறிவு வீதம் அதிகரிப்பதற்கு முக்கிய காரணியாகியது.

இலவச கல்வி பயன்களை மட்டுமன்றிச் சிக்கல்களையும் உருவாக்கியது. அதிகளவிலானோர் இடைநிலைக் கல்வியை முடித்து பல்கலைக்கழகங்களுக்குச் செல்ல விரும்பினர். ஆனால் அதற்கு வசதிப்படுத்தும் வகையில் பல்கலைக்கழக அனுமதி இருக்கவில்லை.

போதுமான பல்கலைக்கழகங்களோ, இருக்கின்ற பல்கலைக்கழகங்களில் மாணவரின் எண்ணிக்கையைக் கணிசமாக அதிகரிப்பதோ நிகழவில்லை. இது சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கை ஆட்சியாளர்கள் கவனிக்கத் தவறிய மாபெரும் தவறுகளில் ஒன்று.

1956 தனிச்சிங்களச் சட்டம் தமிழர்களுக்கான அரச வேலைகளுக்கான வாய்ப்புக்களைக் கிட்டத்தட்ட இல்லாமல் செய்தது. 1956இல் அரச சேவையில் 40 வீதமானோர் தமிழர்கள். இராணுவத்தில் 30 வீதமானோர் தமிழர்கள். இது 1970இல் முறையே 5 மூலமாகவும் 1 மூலமாகவும் குறைந்தது. குறிப்பாக கிராமப்புறக் கல்வியின் குறைபாடுகள் அங்குள்ளவர்களின் பல்கலைக்கழக வாய்ப்புகளை மட்டுப்படுத்தின. பல்கலைக்கழகத்துக்குள் நுழையமுடியாத படித்த இளைஞர்கள், நிலையான வேலைவாய்ப்பைப் பெற முடியாதபோது அவர்கள் ஒப்பீட்டளவில் மிகவும் பின் தங்கியவர்களாக உணர்ந்தனர். இந்த சூழலில், அரசாங்க வேலைகள் மிகவும் விரும்பத்தக்கவை, மேலும் நடுத்தர மற்றும் உயர் மட்ட அரசாங்க வேலைவாய்ப்பைப் பெறுவதற்குப் பல்கலைக்கழக பட்டம் சிறந்த வழியாக இருந்தது. அவ்வகையில் எவ்வாறு தமது பல்கலைக்கழக வாய்ப்பை அதிகரிப்பது என்பது அவர்களின் கேள்வியாக இருந்தது. இந்நிலையிலேயே, இனத்துவ ரீதியில் தமிழர்கள் குறிவைக்கப்பட்டார்கள்.

பிரித்தானிய காலனித்துவ காலத்தில், பெரும்பாலான சிங்களவர்கள் விவசாயத்தின் மூலம் தங்கள் வாழ்வாதாரத்தைத் தொடர்வதில் திருப்தியடைந்தனர். கற்றலை வலியுறுத்தும் ஒரு கலாசாரம் (குறிப்பாக அதன் உயர் சாதியினர் மத்தியில்) வட மாகாணத்தில் மிஷனரி நடவடிக்கைகளுடன் இணைந்ததாக இருந்தது. விவசாயமோ ஏனைய பயிர்செய்கையையோ வாழ்வாதாரமாகக் கொள்ளவியலாதபடி அமைந்த கடுமையான நிலப்பரப்பும் காலநிலையும் தமிழர்களை அரசாங்க வேலைகளை நோக்கி நகர்த்தியது. இதனால் ஒப்பீட்டு அடிப்படையில் தமிழர்கள் அதிகளவில் அரசாங்கப் பணிகளில் இருந்தார்கள். முசனரிக் கல்வியானது உயர்குடித் தமிழர்களை "மேம்பட்ட குழுவாக" உருவாக்கியது. அதே காலப்பகுதியில் வடக்கில் சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வி கற்க அனுமதிக்கப்படவில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அமெரிக்க மிஷனரிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆங்கில வழிக்கல்வியைச் சிறந்த அறிவியல் அடிப்படையிலான கல்வியுடன் இணைத்துச் சிறந்த பள்ளிகளை அமைத்தனர், இது தமிழர்கள் மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற துறைகளில் அதிக அளவில் நுழைய அனுமதித்தது. உண்மையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தனது இரண்டாவது வருடாந்த அறிக்கையை வெளியிட்ட போது, யாழ்ப்பாண மாவட்டத்தில் 50 பாடசாலைகள் கல்விப் பொதுச் சான்றிதழ் உயர்தர விஞ்ஞான அடிப்படையிலான பாடநெறிகளை கற்பிப்பதைக் குறிப்பிட்டுள்ளது, அதேவேளை, அதிக மக்கள்தொகை கொண்ட கொழும்பு மாவட்டத்தில் 42 பாடசாலைகள் மட்டுமே இருந்தன. சிங்களம் மட்டுமே கொள்கையானது பல்கலைக்கழக மாணவர்கள் ஆங்கிலத்திற்கு மேலதிகமாக சிங்களம் மற்றும்

தமிழ் மொழிகளில் கல்விகற்ற வழிவகுத்தது. இந்த மும்மொழி அறிவுறுத்தல் 1960 களின் முற்பகுதியில் கலைப் பீடங்களில் நடைமுறைக்கு வந்தது, ஆனால் அறிவியல் துறைகள் தமிழ், சிங்கள மொழிகளில் போதனைகளை வழங்குவதற்கு ஒரு தசாப்தத்திற்கு மேல் எடுத்தது.

1960களில் இலங்கையின் பல்கலைக்கழகங்களில் ஒரேயொரு பொறியியற் பீடமே இருந்தது. அதற்கு வருடாந்தம் 150 மாணவர்களே அனுமதிக்கப்படுவர். வழமையாக அனுமதிக்கப்படும் தமிழ் மாணவர்களின் தொகை 30 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாகவே இருந்து வந்தது. 1970இல் நடந்த பரீட்சைப்

பெறுபேறுகளின் படி, அனுமதிக்கப்பட்டோரில் 80 சதவீதமான மாணவர்கள் தமிழ் மொழிமூல மாணவர்களாக இருந்தனர். அதற்கு முக்கிய காரணம், பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்கு டியூசன் வகுப்புக்கள் பெரிய அளவில் நடத்தப்பட்டமையாகும். எனினும் சிங்கள மக்கள் நடுவே ஐயங்கள் எழுந்தன.

பேரினவாதிகள் விஷமத்தனமாக அவற்றைத் திசை திருப்பித் தமிழ் பரீட்சகர்கள் வேண்டுமென்றே தமிழ் மாணவர்களுக்கு அதிகளவு புள்ளிகளை வழங்கியுள்ளதாகப் புரளியைப் பரப்பினர். இதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு முக்கிய பங்கு இருந்தது.

குறித்த பரீட்சையில் ஒழுங்கீனங்கள் எதுவும் நடந்தனவா என்ற முறையான விசாரணையின்றி மொழிவழித் தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. அதன் பயனாகத் தமிழ்-சிங்கள விகிதாசாரம் ஏறத்தாழத் தலைகீழாக்கப்பட்டது. பல்கலைக்கழக அனுமதிகள் தரப்படுத்தலின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்ட பின்பு, ஒழுங்கீனம் எதுவும் நிகழவில்லை என்று விசாரணைக்குழுவொன்று உறுதிப்படுத்தியது.

அரசாங்கம் தரப்படுத்தலை அறிமுகப்படுத்த முன்னர் விசாரணைக் குழுவின் முடிவுகள் வரும்வரைக் காத்திருந்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் முடிவுகள் வந்த பின்னராவது தரப்படுத்தலைக் கைவிட்டிருக்க வேண்டும். ஆனால், அது நிகழவில்லை. அதிகளவான தமிழ் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றதில், குடாநாட்டில் ட்யூஷன் வகுப்புக்கள் பெருமளவிற் தொடங்கியிருந்தமை என்பது விசாரணைக்குழுவுக்குத் தெரியாது. அதைவிட முக்கியமாகக் குடாநாட்டை

விட்டால், நகரங்களில் இருந்தளவு கல்வி வசதிகள் கிராமப் பகுதிகளில் இருக்கவில்லை. இந்த விதமான ஏற்றத்தாழ்வுகளைச் சரி செய்வதற்கும் கல்வியில் முதலீட்டைப் பெருக்குதற்கும் பதிலாக,அரசாங்கம் தரப்படுத்தல்,பின்பு மாவட்ட அடிப்படை என்ற விதமான குறுக்கு வழித் தீர்வுகளை நாடியது. இது கோளாறான அரச கொள்கைகள் எவ்வாறு இன முரண்பாடுகளைக் கூர்மையடைய வைத்தன என்பதற்கு சான்றாகும்.

பல்கலைக்கழக அனுமதிப் பிரச்சினை ஒரு இனப் பிரச்சினையாக்கியதிற் பேரினவாதிகள் கட்சி வேறுபாடின்றி செயற்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் தரப்படுத்தலை அங்கீரித்துக்கொள்ள மௌனம் சாதித்தன. எனினும் பின்னர் மாவட்ட அடிப்படை முறையும் சேர்க்கப்பட்டு நகர் சார்ந்த பெரிய பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்ட பின்னர் தரப்படுத்தல் பற்றிய தயக்கங்கள் மேட்டுக்குடிகளிடையே தோன்றின.

1970 தேர்தல் முடிவுகளால் அதிர்ந்து போயிருந்த தமிழரசுக் கட்சி இதைத் தனது குறுந் தேசியவாத நிகழ்ச்சிநிரலுக்கான கருவியாக்க முனைந்தது. அதன் இளைஞர் அமைப்பினர் கல்வி அமைச்சர் ஒரு முஸ்லிம் என்பதைப் பயன்படுத்தி யாழ்ப்பாண முஸ்லிம்களைப் புண்படுத்துமாறான முஸ்லிம் விரோதக் கோஷங்களை எழுப்பினர். இவ்வாறு, தரப்படுத்தல் தேசிய இனப்பிரச்சினையை ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளிற் கூர்மைப்படுத்தியது.

தமிழரசுக் கட்சியும் பிற தமிழ் தேசியவாதிகளும் அதற்கு ஒரு தமிழின உணர்வுப் பரிமாணத்தை வழங்கியதோடு நில்லாது, கல்வி அமைச்சராக இருந்தவர் ஒரு முஸ்லிம் என்பதைப் பயன்படுத்தி அதற்கு முஸ்லிம் விரோதப் பரிமாணத்தையும் வழங்க முற்பட்டனர். அந்த முயற்சி வெற்றி அளிக்காவிடினும் அது ஏற்படுத்தி கசப்புணர்வு புறக்கணிக்கத்தக்கதல்ல.

தரப்படுத்தல் ஏற்படுத்திய சிக்கலிலிருந்து மீளுவதவற்குத், தரப்படுத்தலின் இடத்தில் தரப்படுத்தலோடு இணைந்த மாவட்ட அடிப்படையிலான அனுமதி முறை புகுத்தப்பட்ட போது, யாழ். மாவட்டத்திற்கு வெளியில் வடக்கு - கிழக்கிலிருந்த மாணவர்களுக்கு அது நன்மையளித்ததால், தரப்படுத்தலுக்குகெதிராகத் தமிழ் மாணவர்களது ஏகோபித்த போராட்டம் ஒன்றை முன்னெடுப்பது இயலாது போயிற்று. எனினும் தரப்படுத்தல் பற்றிய கசப்புணர்வு தொடர்ந்தது.

## கடிதங்கள்

# தெருநாய்கள், குரங்குகளின் தொல்லை அதிகரிப்பு



உக்குவளை பிரதேசத்தில் தெருநாய்கள் மற்றும் குரங்குகளின் நடமாட்டங்கள் சமீபகாலமாக அதிகரித்திருப்பதைக் காணமுடிகிறது

தெருநாய்களுள் ஒருசில சொறியுடன்கூடிய நோய்வாய்ப்பட்ட நாய்களும் ஆங்காங்கு காணமுடிகின்றன அத்துடன் நாய்க்குட்டிகளும் ஆங்காங்கு காணமுடிகின்றன இதில் நாய்க்கடிக்குள்ளான சிலர் வைத்தியசாலையில் சிகிச்சையும் பெற்றுள்ளனர்.

இந்நிலைமையில் கூட்டமாக வரும் குரங்குகள் வீட்டுத் தோட்டங்களிலுள்ள காய்கனிகளைப் பறித்தெடுத்துச் செல்வதால் தாம் கஷ்டப்பட்டு தமது தோட்டங்களில் மேற்கொள்ளும் தமது உற்பத்திகளால் பயன் பெறமுடியாதுள்ளதாகவும் தமக்குப் பெருநஷ்டம் ஏற்படுவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர் இவைகள் குறித்து சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் கவனமெடுக்கவேண்டுமென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

- ஏ.எம். ஜலீல்

# பறை முழக்கம்



பந்தல போட்டு பந்தியவச்சி
பாடுபட்டு வயலை உழுது
மூத்த பிள்ளையின் வாழ்க்கக் கதவ
மூண்டு முடிச்சில திறந்தான் தகப்பன்

நாத்து நட்டு தண்ணியப் பாய்ச்சி
நாடு சிரிக்க நாயா உழைச்சான்
ஏழக் குடிச ஓடத்தில மெதக்க
எசமான் அடுக்குமாடியில இருப்பான்

பள்ளிய முடிச்சி பட்டம் வேண்ட
பணமும் இல்ல பஞ்சத் துரையே
படிப்ப நிறுத்தி பொழப்பத் தேடு
பழய அளக்க மடியக் காட்டு

பாமரக் குடியில எத்தன நடப்பு
பட்ட மரத்தில என்ன செழிப்பு
பறையே முழங்கிச் சங்கதி சொல்லு
பயிர வெதச்சவன் பண்பட்டு நடப்பான்

– சம்பூர் சமரன்



# புணர்வின் நுளைவினிலே

நீரின் கசிவுகளைவிழுங்கியபடி
நிலைகொண்டிருந்த – அந்த
வீதியோரசுண்ணாம்புத் தூண்

சுவரொட்டிகளிடம் தன்னை
இழந்துகொண்டிருந்தது
தினம் தினம்

ஒட்டுவதும் கிழிப்பதுமாய்
எத்தனை தீண்டல்கள்
எத்துணை விரசங்கள்

காவலுக்கு சில கட்டாக்காலிகள்
அவ்வப்போதுஅவைகளும்
கால்களை தூக்கிக் கொள்ளும்

இப்போது
தூண் துளிர் விட்டிருந்தது
எச்சமொன்று மிச்சமென

அதே இலை...
அதேகிளை...

இதோ!
ஆலவட்டங்களுடன் ஆயிரம் பேர்

இனி!
அவர்கள் தேடும்
பூரணைப் படிமம் இவள்

எனினும்
பௌர்ணமிக்குமுன்னதாக
புதைத்திடுங்கள் அவளை
புத்தனுக்கு பக்கத்திலே

புதிராகவே இருந்துவிட்டுப் போகட்டும்
விடியும் வரை ...


– திருமலை சிட்டு



# நேர்படப் பேசு

எதை வேண்டுமானாலும்
பேசு
எதை வேண்டுமானாலும்
எழுது
எதையாவது
செய்

அத்தனைக்கும்
கோசமிட கூட்டம் உண்டு..



கண்விழித்துப் பார்
நீபால்குடிக்கும்
பூனையாக
அல்லது
தீக்கோழியாக....

பேசு
உன்னோடு பயணிக்கும்
அவலங்களை
நீ
இழக்கும்
வரலாறுகளை
சிதைந்து போகும்
உன்
தொன்மங்களை

ஒருவன்
விதைக்கிறான்...
ஒருவன்
தேடுகிறான்
இன்னொருவன்
திருடிக் கொள்கிறான்

பாடி கொண்டே நாமிருப்போம்
பைந்தமிழ் சொல்லெடுத்து

– கனக.தீபகாந்தன்

# முடிவுறாத தேடல்கள்


குளிர்மையின்
நடுப்பக்கத்திற்கு
இரு உடல்களும்
நகர்ந்துவிட்டன

முன்னேறிக் கொண்டேயிருந்தனர்
சுட்டுக்கொண்டேயிருந்தான்
ஒரு குவளை நீர் போதும்
இருவருக்கும்
உடல்களின் நிலையை
அடைந்துவிடலாம்

காலம்தான் பொல்லாதது
உங்களுக்கு தெரியும் தானே.
அன்றைய நாளின் முடிவு
“இன்றுபோய் நாளைவா"
என்பதாகவும் இருந்து
விடக்கூடாது
என்பதில் ஐவரும்
உறுதியாகவிருந்தோம்

புதிதாகவரும் ஒருவனை
எங்குநிறுத்தலாம் என்பதில் தான்
நகர்கிறது எல்லாக் கணங்களும்

– லலித்தா



# SLT-MOBITEL Enterprise அறிமுகம்

SLT-MOBITEL, தனது SLT-MOBITEL Enterprise இன் புதிய திட்டமான ‘எல்லைகளுக்கு அப்பால் வியாபிப்பதற்கு’ என்பதை நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கு (MSMEs) அறிமுகம் செய்துள்ளது.

அதனூடாக டிஜிட்டல் மாற்றத்தையும், தேசத்தின் பொருளாதார விருத்தியில் தமது பங்களிப்பை அதிகரிக்கச் செய்வதற்கும் முன்வந்துள்ளது.

இந்தத் திட்டத்தினூடாக, SLT-MOBITEL இனால், பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப தயார்நிலை மற்றும் உள்நாட்டு தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் ஆற்றல் போன்றவற்றில் நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கு குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை எய்தக்கூடியதாக இருக்கும்.




அண்மையில் நடைபெற்ற நிறுவனசார் தயாரிப்பு அமர்வின் போது, SLT-MOBITEL Enterprise இனால் நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை வியாபார உரிமையாளர்களுக்கு Cubkit ab builder, Akaza HR, Akaza ERP போன்றன அறிமுகம் செய்யப்பட்டிருந்ததுடன், பங்குபற்றுநர்களுக்கு இந்த தயாரிப்புகளுடன் ஈடுபாட்டை பேணும் வாய்ப்பும் வழங்கப்பட்டிருந்தது.

மேலும், மேற்படி SLT-MOBITEL இனால் நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கு வழங்கப்படும் பரந்தளவு தெரிவுகளில் security cloud, மற்றும் connectivity தீர்வுகள் காணப்படுகின்றன.

Cloud வழங்கல்களில் Enterprise Premium Cloud, Google Worksace, Eazy Storage, HOSTINGCUB போன்றன அடங்கியுள்ளன.

CUBKIT - Web Builder, மற்றும் CGaaS AI Platform. பாதுகாப்பு தீர்வுகள் உள்ளம்சங்களில் indows Defender மற்றும் Kaspersky Endpoint Security solutions மற்றும் connectivity தெரிவுகளில் FTTH Flash, One Shot Ultra, Secured Business Internet Line ( BIL), AI SecureNet, Net Guard, மற்றும் Net Guard plus போன்றன அடங்கியுள்ளன.

SLT-MOBITEL இனால் வழங்கப்படும் தீர்வுகளினூடாக, நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு, வாடிக்கையாளர்களின் வியாபார தன்னியக்கமயப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தலை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவிகள் வழங்கப்படும். இவ்வாறான நிறுவனங்களுக்கு புத்தாக்கமான தொழில்நுட்பங்களை தமது செயற்பாடுகளில் உள்வாங்கவும், நீண்ட கால வினைத்திறனை ஊக்குவிக்கவும், நீண்ட கால நிலைபேறாண்மையை பேணுவதற்கும் SLT-MOBITEL க்கு ஆதரவு வழங்க முடிந்துள்ளது.

இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கு பொருத்தமான வகையில் டிஜிட்டல் தீர்வுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதுடன், தற்போதைய பொருளாதார சவால்கள் நிறைந்த சூழலில், உற்பத்தித்திறனை முன்னெடுத்துச் செல்வதற்கும், புதிய வாய்ப்புகளை திறப்பதற்கும், மீண்டெழுந்திறனை கட்டியெழுப்பவும் உதவுவதுடன், அதனூடாக தேசிய வளர்ச்சி மற்றும் தொழில் வாய்ப்புகள் போன்றவற்றில் நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும்.

“எல்லைகளுக்கு அப்பால் வியாபிப்பதற்கு” எனும் தொனிப்பொருளினூடாக, நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு தூர நோக்குடைய இலக்குகளை நிர்ணயிக்கவும், தமது எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் மாற்றங்களை கட்டமைத்துக் கொள்ளவும் முடிந்துள்ளது.

எதிர்பார்ப்புகள் நிறைந்த உள்ளம்சங்களைக் கொண்டுள்ள SLT-MOBITEL நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு துரித தொழில்நுட்பங்களை வழங்கி, தேசிய மீட்சிக்கு உறுதியான பங்களிப்பை வழங்கவும், உடழரன தொழில்நுட்பத்தை பயன்படுத்தவும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

நுண்,சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சி யாண்மைகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கடந்த ஆண்டின் நிறுவனசார் தீர்வுகளின் வெற்றிகரமான செயற்பாடுகளைத் தொடர்ந்து, எதிர்வரும் ஆண்டில் தமது சேவை வழங்கல்களை மேலும் மேம்படுத்துவதற்கு SLT-MOBITEL தன்னை உறுதிப்படுத்தியுள்ளது.

# 50 குடும்பங்களுக்கு நீர் சேமிப்புத் தொட்டிகள்

கொமர்ஷல் வங்கியானது, அறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோயின் (CKDu) பரவலைத் தடுக்க உதவும் முயற்சிக்கு வங்கியின் தொடர்ச்சியான ஆதரவின் ஒரு பகுதியாக, கின்னொறுவ, கிரந்துருகோட்டையில் உள்ள 50 குடும்பங்களுக்கு 5,000 லீற்றர் நீர் சேமிப்புத் தொட்டிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

மழைநீரை சேமிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட இந்த தொட்டிகள், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆறு மாதங்கள் வரை குடிநீர் மற்றும் சமையல் நீர் தேவைகளை வழங்க முடியும் என்றும், அப்பகுதியில் நிலத்தடி நீரில் உள்ள தீங்கு விளைவிக்கும் அசுத்தங்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் என்றும் வங்கி தெரிவித்துள்ளது.

இந்த நன்கொடையானது 2016ஆம் ஆண்டு முதல் கொமர்ஷல் வங்கியால் ஆதரிக்கப்படும் ‘மழைத்துளிகள்’ திட்டத்தில் சமீபத்திய கட்டமாகும். இது சிறுநீரக நோயால் அதிகம் பாதிக்கப்படும் பகுதிகளில் தரமற்ற நிலத்தடி நீருக்கு மாற்றாக மழைநீரின் செயல்திறனைப் பற்றிய ஆராய்ச்சியை உள்ளடக்கிய திட்டமாகும்.

திட்டத்தின் முதல் கட்டத்தில், கொமர்ஷல் வங்கியிலிருந்து நீர் சேமிப்புத் தொட்டிகளைப் பெற்ற 25 குடும்பங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக சுத்திகரிக்கப்பட்ட மழைநீரை பயன்படுத்தினர், அதன் பிறகு அவர்கள் CKDu சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

50 குடும்பங்களின் வாழ்க்கை நிலைமைகள், உணவுப் பழக்கங்கள் மற்றும் உணவு முறைகள் போன்ற பிற மாதிரிகள் ஒரே மாதிரியாக இருப்பதை உறுதி செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

கிணற்று நீரை பருகிய குழுவைச் சேர்ந்த பலருக்கு நிலை 1 CKDu இருப்பது கண்டறியப்பட்டாலும், மழைநீரை பருகியவர்களில் எவருக்கும் நோயின் அறிகுறிகளை காட்டவில்லை என்றும், மழைநீரைப் பருகிய சில சிறுநீரக நோயாளிகளின் GFR அளவுகள் இருப்பதாகவும் ஆய்வின் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது கட்டத்தில், கொமர்ஷல் வங்கி, வயம்ப பல்கலைக்கழகத்தின் போஷாக்குத் துறையால் மழைநீர் குடிப்பதற்கு ஏற்றதா என்பதைப் பற்றிய அறிவியல் பகுப்பாய்வை மேற்கொண்டது, இது நீரின் தரம், pH மதிப்பு, மின் கடத்துத்திறன் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட மழைநீரின் பிற பண்புகள் குறித்து ஆழமான ஆராய்ச்சியை நடத்தியது.



மழைத்துளிகள் திட்டத்தின் வெற்றியை அவதானித்த பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிறுநீரக நோய்களுக்கான கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் (CERTKiD) கின்னொறுவை பிரதேசத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் 5,000 லீற்றர் சேமிப்புத் தொட்டிகளை வழங்குவதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டது. அதன்படி கொமர்ஷல் வங்கி 5,000-லீற்றர் கொள்ளளவு கொண்ட மேலும் 50 தொட்டிகளை நன்கொடையாக வழங்கியது.

அமெரிக்கா

# ‘தானியங்கி கார்’ திட்டத்தை கைவிடும் ஆப்பிள்



சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்க உலகம் முழுவதும் கோரிக்கைகள் அதிகரித்து வரும் நிலையில், உலகின் முன்னணி வாகன உற்பத்தி நிறுவனங்கள், மின்சார வாகன தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றன. இதில், ஐபோன் (*iPhone*) எனும் உயர் தொழில்நுட்ப ஸ்மார்ட் போன்களை தயாரிக்கும் ஆப்பிள் நிறுவனமும் களம் இறங்கியது.

‘அட்டானமஸ் வெஹிகிள்’ (*autonomous vehicle*) எனப்படும் ஓட்டுனர் இன்றி தானாக இயங்கும் கார்களை உற்பத்தி செய்யும் திட்டத்தில் ஆப்பிள் ஈடுபட்டுப் பல பில்லியன் டொலர்கள் முதலீடு செய்தது. சுமார் 2 ஆயிரம் வல்லுநர்கள் இதில் பணியாற்றி வந்தனர்.

இத்தகைய வாகனங்களில் பிற கார்களில் உள்ளதைப்போல் ‘ஸ்டியரிங் வீல்’ மற்றும் ‘பிரேக்’, “கிளட்ச’, ‘ஆக்சிலரேட்டர்’ போன்ற பெடல்கள் இருக்காது. இதன் இயக்கம் ‘குரல்’ மூலம் இருக்குமாறு உருவாக்கப்பட்டு வந்தது.

ஆனால், இதுவரை இத்திட்டம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. தானியங்கி காரை உருவாக்க மேலும் பல வருடங்கள் ஆகலாம் என தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, இந்த தானியங்கி கார் உருவாக்கத் திட்டத்தை ஆப்பிள் நிறுவனம் கைவிட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு (*Artificial Intelligence*) துறை வளர்ச்சி அடைந்து வருவதால், அதில் முதலீடுகளைச் செய்ய ஆப்பிள் திட்டமிட்டுள்ளது.

ஆப்பிள் நிறுவனம் இது குறித்து தற்போது வரை அதிகாரப்பூர்வ கருத்து தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தெற்கு சீனா

# வளர்ப்பு நாயால் அடித்த அதிர்ஷ்டம்



தெற்கு சீனாவின் குவாங்டாங் நகரில், நடைப் பயிற்சி சென்று கொண்டிருந்தார் லின் என்ற பெண். அவர் கையில் பிடித்திருந்த நாய், ஒரு கடைக்கு அருகே வந்தபோது திடீரென அவரது பிடியிலிருந்து நழுவி கடைக்குள் ஓடியது. அங்கு வைக்கப்பட்டிருந்த லொட்டரி டிக்கெட் ஒன்றைக் கவ்விப்பிடித்தது. இதையடுத்து அவர் அதை வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இறுதியில் அந்த சுரண்டல் லொட்டரிக்கு 139 டொலர் பரிசு விழுந்திருந்தது. இதனால் லின் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இதனால் மறுநாள் அவராகவே தனது நாயை மீண்டும் கடைக்கு அழைத்துச்சென்று ஒரு லொட்டரியை கவ்வச்செய்தார்.

அப்போது, அவருக்கு 4 டொலர் பரிசு விழுந்தது. அதிர்ஷ்டத்தைத் தேடித்தந்த நாய்க்குப் பரிசுத் தொகையில் ஒரு பகுதிக்கு உணவு வாங்கிக் கொடுத்ததாக லின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

# ஜெர்சிகளை அணிந்து கின்னஸ் சாதனை



சமீப காலமாக உலகம் முழுவதும் சிறுவர்கள் முதல் பலரும் பல்வேறு வகைகளில் உலக கின்னஸ் சாதனை படைத்து வருகின்றனர். அந்த வகையில், அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு சிறுமி ஒரே நேரத்தில் 45 ஜெர்சிகளை அணிந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

சோபியா என்ற அந்த சிறுமி உலக சாதனை படைக்கும் போது அங்கிருந்த ஒவ்வொரு ஜெர்சியையும் இடுப்பு வரை இழுக்க வேண்டி இருந்தது. சோபியாவை போலவே அவரது தாயாரும் உலக சாதனை படைத்துள்ளார்.

சோபியா உலக சாதனையைத் தான் வசிக்கும் இடத்தில் உள்ள பொது நூலகத்தில் படைத்தார். முன்னதாக பிரான்ஸ் நாட்டை சேர்ந்த 11 வயது சிறுவன் தோமஸ் உமாம்போ ஒரே நேரத்தில் 40 ஜெர்சிகளை அணிந்திருந்ததே உலக சாதனையாக இருந்தது. அதனை சோபியா முறியடித்துள்ளார்.

பஞ்சாப்

### போராட்டத்தில் விவசாயின் மரணம்:

# கொலை வழக்காக பதிவு



பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் புது டெல்லியை நோக்கி பேரணி நடத்த முடிவு செய்தனர். இதற்காகப் பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலத்திலிருந்து புறப்பட்டனர். ஆனால் அரியானா, பஞ்சாப் மாநில எல்லைகள் மூடப்பட்டு, விவசாயிகள் புது டெல்லி நோக்கிச் செல்லாத வகையில் தடுப்புகள் அமைக்கப்பட்டன.

கடந்த 21ஆம் திகதி பஞ்சாப் – அரியானா எல்லை கனாரி பகுதியில் தடுப்புகளைத் தாண்டி விவசாயிகள் புது டெல்லி நோக்கிப் புறப்பட முயன்றனர். அப்போது பஞ்சாப் எல்லைக்குள் புகுந்து அரியானா பொலிஸார் விவசாயிகள் மீது தாக்குதல் நடத்தினர். அப்போது துப்பாக்கிச்சூடு நடத்தியதாகத் தெரிகிறது. இதில் சுப்கரண் சிங் என்ற 21 வயது இளம் விவசாயி பரிதாபமாக உயிரிழந்தார். அதேவேளையில் 12 பாதுகாப்பு பொலிஸாரும் காயம் அடைந்தனர்.

சுப்கரண் மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் சுப்கரண் சிங் மரணத்தைக் கொலை வழக்காகப் பதிவு செய்ய வேண்டும். அதுவரை அவரது உடலை அடக்கம் செய்யமாட்டோம் என அறிவித்தனர்.

இந்நிலையில், ஒருவாரம் கழித்து பொலிஸார் கொலை வழக்கு உள்ளிட்ட இரு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அரியானாவின் சிந்து மாவட்டத்தில் உள்ள கார்கி என்ற இடத்தில் சம்பவம் நடைபெற்றதாக அவரது தந்தை அளித்த புகாரின் அடிப்படையில் பொலிஸார் அடையாளம் தெரியாத நபருக்கு எதிராகக் கொலை வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# கங்கையில் யாரும் குளிக்க வேண்டாம்



இமயமலையில் இந்த நதி உருவாகிப் பல மாநிலங்கள் வழியாகக் கடந்து சென்று மேற்கு வங்க மாநிலத்தில் கடலில் கலக்கிறது. கங்கை நதியில் நீராடினால் அனைத்து பாவங்களும் போகும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. இதனால் ஒவ்வொரு ஆண்டும் பல கோடி பேர் கங்கை நதியில் நீராடுகிறார்கள்.

இந்நிலையில், மேற்கு வங்கத்தில் பாயும் கங்கை ஆறு பொதுமக்கள் குளிக்கத் தகுதியில்லாத இடமாக மாறியுள்ளதாகத் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் அறிவித்துள்ளது.

மேலும், ஒருநாளைக்கு 258 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் நேரடியாக ஆற்றில் கலக்கிறது. இதனால் பாக்டீரியா வைரஸ் பரவல் அதிகம் இருப்பதால் பொதுமக்கள் யாரும் கங்கை நதியில் குளிக்க வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

# அண்ணன் – தங்கை திருமணம்



இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் ஆண்கள் தங்கள் அத்தை மகள், மாமன் மகள், அக்கா மகள் போன்ற முறை பெண்களை திருமணம் செய்யும் வழக்கம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இந்தியாவிலுள்ள ‘துருவா’ என்ற பழங்குடி சமூகம் ஒரே தாய் வயிற்றில் பிறந்த ஆண்களும், பெண்களும் திருமணம் செய்துக்கொள்கின்றனர். ஆதாவது அண்ணன் – தங்கை, அக்கா– தம்பி ஆகிய உறவு முறைகளில் திருமணம் செய்துக்கொள்கின்றனர்.

இங்கு ஏன் இப்படி ஒரு கலாசாரம் பின்பற்றபடுகிறது என்பது குறித்து எந்த விளக்கமும் இல்லை. இந்த பழங்குடியின சமூகத்தின் கலாசாரம் குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.



### கிழக்கு விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் கிரிக்கெட் தொடர்:

# சம்பியனான மட்டக்களப்பு விவசாயத் திணைக்கள அணி

**வி.ரி. சகாதேவராஜா**

கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் தொடரில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர் அணி சம்பியனாகியது.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நான்கு அணிக பங்கேற்ற இத்தொடரின் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் திருகோணமலை மாவட்ட விசாவசயத் திணைக்கள அணியை வென்றே மட்டக்களப்பு விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் அணி சம்பியனானது.

### பங்களாதேஷுக்கெதிரான தொடருக்கான

# இலங்கை குழாமில் அவிஷ்க



பங்களாதேஷுக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமில் அவிஷ்க பெர்ணாண்டோ இடம்பெற்றுள்ளார்.

பின்தொடைத்தசைநார் உபாதையிலிருந்து பதும் நிஸங்க குணமாகாததன் காரணமாகவே அவிஷ்க குழாமில் இடம்பெற்றுள்ளார்.

இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் தடை காரணமாக அணித்தலைவர் வனிடு ஹசரங்க விளையாட முடியாத நிலையில் உப அணித்தலைவர் சரித் அசலங்க அணிக்குத் தலைமை தாங்கவுள்ளதுடன், ஜெஃப்ரி வன்டர்சே குழாமில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

குழாம்: வனிடு ஹசரங்க, சரித் அசலங்க, குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்கிரம, அஞ்சலோ மத்தியூஸ், தசுன் ஷானக, மகேஷ் தீக்‌ஷன, தனஞ்சய டி சில்வா, குசல் பெரேரா, டில்ஷான் மதுஷன்க, நுவான் துஷார, மதீஷ பத்திரண, அகில தனஞ்சய, பினுர பெர்ணாண்டோ, கமிந்து மெண்டிஸ், அவிஷ்க பெர்ணாண்டோ, ஜெஃப்ரி வன்டர்சே.

# அறபா வித்தியாலய பழைய மாணவர் பங்கேற்கும் கிரிக்கெட் தொடர்

**பைஷல் இஸ்மாயில், எம்.ஏ.றமீஸ்**

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரானது இன்று தொடக்கம் நாளை மறுதினம் வரையில் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இத்தொடரில் 21 பழைய மாணவ அணிகள் பங்கேற்கவுள்ளதுடன், இப்போட்டிகல் யாவும் பகல் நேரப் போட்டிகளாக இடம்பெறவுள்ளதாகவும் அறபா வித்தியாலய பழைய சங்கத்தின் உபசெயலாளர் ஏ.அர்ஷாட் தெரிவித்தார்.

இது தவிர சம்பியனாகும் அணிக்கு ரூபா 75,000 பணப்பரிசும், சம்பியன் கிண்ணமும் வழங்கப்படுமென்றும் இரண்டாமிடம் பெறும் அணிக்கு ரூபா 50,000 பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படுமென்று அர்ஷாட் மேலும் குறிப்பிட்டார்.

# புத்தளத்தில் சுப்பர் லீக் கால்பந்தாட்டத் தொடர்

**எம்.யூ.எம். சனூண்**



புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் ஸ்தாபகர் முஹம்மது யமீனின் முயற்சியில் “லெஜன்ட்ஸ் சுப்பர் லீக்” எனும் பெயரில் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரானது நாளை காலை 8.30 மணி புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மொத்தமாக எட்டு அணிகள் கலந்து கொள்ளவுள்ள இத்தொடரில் புத்தளத்தை சேர்ந்த இரண்டு அணிகள் மற்றும் புத்தளம் மாவட்டத்துக்கு வெளியில் உள்ள ஆறு அணிகள் பங்குபற்றவுள்ளன.

புத்தளம் அணிகள் சார்பாக புத்தளம் லிவர்பூல் கழகம் மற்றும் நிவ் ஸ்டார்ஸ் கழகங்கள் பங்கு பற்றவுள்ளன.

வெளி மாவட்ட அணிகளாக ட்ரிங்கோ எப்.சி திருகோணமலை, கார்டியன் எப்.சி.குருநாகல், எவர்கிறீன் கழகம் கலகெதர, லைட் இன்பென்ட்ரி கழகம் கண்டி, கெடேரியன் கழகம் கொழும்பு லெவிண் ஸ்டார் கழகம் பரஹதெனிய ஆகிய அணிகள் பங்கேற்கின்றன.

இலங்கை இராணுவ அணி வீரர்கள், கடற்படை அணி வீரர்கள் மற்றும் இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணி வீரர்கள் என பல்வேறு வீரர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

### மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024 வட மாகாணத் தொடரின்

# முல்லை மாவட்ட தகுதிகாண் போட்டிகள் நாளை

மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024 வட மாகணத் தொடரின் முல்லைத்தீவு மாவட்ட தகுதிகாண் போட்டிகளானவை முல்லைத்தீவு பிரதேச சபை மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

10 மற்றும் 12 வயதுக்குட்பட்டவர்களுக்கிடையிலான ஆண், பெண் என இரு பாலருக்குமிடையிலான இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் இருந்து முதல் நான்கு பாடசாலைகளானவை வட மாகாண இறுதிப் போட்டிகளுக்குத் தெரிவாகவுள்ளன.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 01 , மார்ச் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.